*6*

# எதிர்காலத்திற்காக ஆறுதல்படுத்துதல்

## (யோவான் 14)

*"நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்" (வசனங்கள் 25-31).*

இயேசு, தாம் சிலுவையில் அறைப்படுவதற்கு முந்திய வியாழக்கிழமை இரவில், மேல் வீட்டில் அப்போஸ்தலர்களுடன் இருக்கையில், அவர்களுக்காகக் காத்திருந்த இருளான எதிர்காலத்திற்கு அவர்களைத் தயார் செய்யும் வகையில் அவர்களிடம் ஆறுதலான வார்த்தைகளைப் பேசினார். இந்த உரையாடல்கள் அவர்களுக்கு முக்கியத்துவத்தில் உன்னதமானவைகளாகவும் தனிச்சிறப்பில் நிரந்தரமானவைகளாகவும் இருந்தன, அவைகள் நமக்கும் தொடர்புடையவைகளாகவும் உள்ளன. அவர்களுடன் "வாசம் செய்துகொண்டிருக்கையில்" அவர்களுக்கு அவர் பேசிய அந்தப் புத்திமதிகளை நாம் எவ்வளவாகப் பொக்கிஷமாய்ப் பாதுகாக்கிறோம் (14:25)! அவர்களுக்கு அவர் உரைத்த வார்த்தைகள், இன்றைய நாட்களில், நமக்கு முன்னதாகக் கிடக்கும் ஒவ்வொரு நாளைய தினத்திலும் நமது வழியை நாம் கண்டுணர்கையில், நாம் கொண்டுள்ள தேவைகள்மீது ஒரு தேடும் விளக்காகப் பிரகாசிப்பவையாகக் காணப்படுகின்றன.

### ஆவியானவரின் நடத்துவத்துவம்

அப்போஸ்தலர்களின் ஊழியத்திற்கு வழிநடத்துதல் தேவைப்பட்டது.

அவர்களுக்கு உதவும்படி, பிதாவானவர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் என்று இயேசு அவர்களுக்கு விளக்கி உரைத்தார். இது பரிசுத்த ஆவியானவரைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் வாக்குத்தத்தங்களில் ஒன்றாகும். இயேசு, “என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” என்று கூறினார் (14:26). பிதாவானவர் இந்த உதவியாளரை, தேற்றவாளரை (*paraklētos*) இயேசுவின் நாமத்தினாலே அனுப்பினார். கிறிஸ்துவின் ஊழியத்தை மகிமைப்படுத்துவதும் அதன் மதிப்பை உயர்த்துவதுமே அவரது ஊழியமாக இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு அவர், தனிச்சிறப்பான இரு வழிகளில் உதவிசெய்ய வேண்டியவராக இருந்தார்: புதிய வெளிப்பாடுகளின் மூலம் “எல்லாவற்றையும்” அவர்களுக்குப் போதித்தலினால் மற்றும் அவர்களுக்கு இயேசு ஏற்கனவே போதித்திருந்தவற்றை அவர்களின் நினைவுக்குக் கொண்டு வருதலினால். கிறிஸ்து போட்டிருந்த அஸ்திபாரத்தின்மீது அப்போஸ்தலர்கள் கட்டியெழுப்புகையில் அவர்களை அவர் வழிநடத்துவார்.

பரிசுத்த ஆவியானவரின் வருகையானது நமக்கும் அளிப்புகளைத் தந்தது. அப்போஸ்தலர்கள் மற்றும் ஏவுதல் பெற்ற பிற எழுத்தாளர்கள் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களை நமக்கு கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் மீது, வானத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். ஆவியானவரின் பிரசன்னத்திற்குள்ளாக்கிய இந்த ஞானஸ்நானம், உலகத்திற்குத் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும்படி, மற்ற கிறிஸ்தவர்களுக்கு அற்புத வரங்களைப் பங்களிக்கும்படி, மற்றும் உறுதிப்படுத்தும் அற்புதங்களைச் செய்யும்படி அப்போஸ்தலர்களுக்குப் பலம் அளித்தது. அப்போஸ்தலர்களுடன் தங்கியிருந்த பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு என்னவாக இருந்தாரோ, நாம் தேவனுடைய வசனத்தின் வெளிப்படுத்துதலில் வல்லமை மற்றும் சத்தியத்தில் நாம் ஜீவிக்கும் போது நமக்கு அவ்வாறு இருக்கிறார்.

## சமாதானத்தின் அமைதித்தன்மை

இயல்பாகவே அப்போஸ்தலர்கள், அப்படிப்பட்ட ஒரு இருளான எதிர்காலத்தைக் கண்ணோக்குகையில், தங்கள் இருதயங்களுக்குச் சமாதானத்தை நாடினர். இயேசு, “நான் அதை உங்களுக்குக் கொடுக்கிறேன்” என்று கூறினார். அவர், “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை” என்று கூறினார் (14:27அ). குழப்பம் மற்றும் நிலைகுலைவு இருக்கையில், நிலைப்புத் தன்மையுடனும் அமைதியுடனும் இருத்தலே சமாதானம் என்பதாக உள்ளது. இயேசு இந்த மனிதர்களுக்கு அமைதியை அருளாது விட்டுவிட மாட்டார். இவர்களுக்கு அவர் விட்டுச் செல்லும் சமாதானம் சத்தியத்தின் சமாதானமாக, என்ன நடக்கிறது என்பதை அறிதலில் இருந்து வருகிற சமாதானமாக இருந்தது. அவர் பிரிந்து செல்லும் முன்பு தமது வார்த்தைகளினால் மாத்திரம் அல்ல ஆனால் இனிவர இருந்த நாட்களில் அவர்களுடன் தாம் இருந்த தமது பிரசன்னத்தினாலும் அவர்களுக்கு இந்த சமாதானத்தை அளித்தார். “நான் போவேன் என்றும்,

திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே" (14:28அ). விரைவிலேயே அவர்கள் கிறிஸ்துவை ஆவிக்குரிய பிரசன்னத்தில் அறிய வருவார்கள். பிற்பாடு அவர்களுடன் அவர் ஒரு புதிய வகையில் இருப்பார்.

அவர் விட்டுச் சென்ற சமாதானமும் அவர் கொடுக்க இருந்த சமாதானமும், உலகத்தில் இருந்து கிடைக்கும் சமாதானத்தின் வகையைச் சேர்ந்ததாக இருப்பதில்லை. துன்பம் அல்லது இடர்ப்பாடு என்பதில் இருந்து விடுதலை என்பதே இந்த உலகம் அளிக்கக் கூடிய ஒரே சமாதானமாக உள்ளது - மற்றும் அது இவ்வகையான சமாதானத்தை மிகவும் அடிக்கடி அளிக்க இயலாது. இப்படிப்பட்ட சமாதானம், எல்லாச் சூழ்நிலைகளும் சரியானவைகளாக இருக்கும்போது மாத்திரமே வருகிறது மற்றும் சில வேளைகளில் (எல்லாச் சூழ்நிலைகளும் சரியானவைகளாக இருக்கும்போதுகூட) வருவதில்லை. கொந்தளிப்பின் மத்தியிலும், இயேசுவிடமிருந்து வருகிற சமாதானம் அப்போஸ்தலர்களுக்கு உரியதாக இருக்கும்.

இப்போது கூட இயேசு மக்களுக்கு சமாதானத்தை அளிக்கிறார். அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குச் சமாதானத்தை அருளுகிறார். நாம் விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் அவரிடம் வரும்போது அதை அவர் நமக்கு அளிக்கிறார்; பிற்பாடு நமக்குச் சோதனைகள் ஏற்படும்போது, அவர் தமது பிரசன்னத்தினால் புதிய சமாதானத்தை அளிக்கிறார். அப்போஸ்தலர்கள், சரீரப்பிரகாரமாகக் கிறிஸ்துவின் தோழமையில்லாத நிலையில் எதிர்காலத்தில் வரவிருந்த தீங்குகளைக் கண்டனர். இது அவர்களை அசைத்தது; அவர்களின் உலகம், முறிந்து போன குறிக்கோள்கள் மற்றும் பயனற்றுப்போன திட்டங்கள் ஆகியவற்றின் குவியலாகக் குலைந்து போனதாகத் தோன்றியது. கலக்கம் அடைந்த அவர்களின் இருதயங்கள் சமாதானத்திற்காகக் கதறின, மற்றும் அதை இயேசு அவர்களுக்குக் கொடுத்தார். அவர், "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று கூறினார் (14:27ஆ). அவர், "எதிர்காலத்தைப் பற்றிய எல்லாவற்றையும் நான் அறிவேன். அதில் என்ன நடக்கும் என்பதை நான் அறிவேன், மற்றும் அதனூடாக உங்களை நான் வழிநடத்துவேன்" என்று மறைமுகமாக உணர்த்தினார்.

## விசுவாசத்தின் தைரியம்

எதிர்காலம் விசுவாசமாக இருக்கவும் அழைப்பு விடுத்தது. மாபெரும் விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன, ஆனால் அப்போஸ்தலர்கள் அவற்றின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டி இருந்தது. அவர்களிடம் இயேசு பின்வருமாறு கூறினார்:

> "நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்றும் நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்" (14:28, 29).

உண்மையான விசுவாசம் கிறிஸ்துவின் வார்த்தைகளின் மீது முன்னுரைக்கப் பட்டுள்ளது (ரோமர் 10:17). அவரது வார்த்தைகளைக் கேட்டு, அவற்றை ஏற்றுக்கொண்டு, நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றைக் கொண்டு அவற்றின் மீது செயல்படுகிற மக்களுக்கு மாத்திரமே அது வருகிறது.

அப்போஸ்தலர்களிடத்தில் இருந்து கிறிஸ்து பிரிந்து சென்றபோது, அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்ட தனிநபர்கள் என்ற வகையில், அகம் மகிழக் கூடியவர்களாக இருந்தனர். உலகத்திற்காகத் தேவன் வைத்துள்ள மாபெரும் திட்டத்தின் இன்னொரு பகுதிக்குள் அவர் பிரவேசித்ததைக் குறித்து அவர்கள் தைரியமாக இருக்க முடிந்தது. அவர் பிதாவிடம் திரும்பிச் சென்று கொண்டிருந்தார். அவர் தமது பூமிக்குரிய ஊழியத்தில், தமக்காகப் பிதா கொண்டிருந்த சித்தத்தை நிறைவேற்றி இருந்த நிலையில், பிதாவின் வலது புறம் தமது இடத்தை எடுத்துக் கொண்டதன் மூலமாக அவர், நித்திய நோக்கத்தை நிறைவேற்றத் தொடருவார். அப்போஸ்தலர்களிடம் அவர் பேசிய வார்த்தைகளினால், அவர்கள் இந்தப் பிரிவைத் தாங்கிக்கொள்ளப் பலப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் அவர், "இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்" என்று உறுதி அளித்தார் (14:29).

இயேசு சிலுவையில் அறையப்பட்டதும் அவரது மரணமும் இந்த அப்போஸ்தலர்களுக்கு, என்ன ஒரு பூமியைச் சிதறடிக்கும் அனுபவமாக இருந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை மாத்திரமே செய்து பார்க்க முடியும். இந்த மாபெரும் துன்பத்தின் கண்ணோக்கில் இயேசு பின்வருமாறு கூறினார்:

> இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்று அவர்களுக்குக் கூறினார் (14:30, 31).

இயேசு இந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டு இருக்கையில், "இந்த உலகத்தின் அதிபதி"யான பிசாசினால் முடுக்கப்பட்ட கும்பல் ஒன்று கூடிக்கொண்டிருந்தது. அவரை விசாரணை செய்த நிகழ்வுகள், அவர் அடிபட்ட நிகழ்வுகள் மற்றும் அவருக்கு மரணத்தீர்ப்பிடப்பட்ட நிகழ்வு ஆகியவை சிலமணி நேரத் தொலைவிலேயே இருந்தன.

எல்லாவற்றிலும் மாபெரும் போராட்டம் தனது உச்சநிலையை அடைந்தது என்று இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு நினைவூட்டினார். குற்றமற்றவரான கிறிஸ்து, தம்மைச் சிலுவையில் அறைய அனுமதித்ததன்மூலம், சிலுவையை ஒரு பலிபீடமாக மாற்றி அவரே உலகத்தின் பாவங்களுக்கான பலி ஆடாக ஆவார். இந்த நிகழ்வுகளைப் பொறுத்த மட்டில் இயேசுவின் அணுகுமுறையானது, அவர் தமது பிதாவினிடத்தில் கொண்டிருந்த அன்பை ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்தும். அவர் முன்னமே தம்மைப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்ததால், சிலுவைக்குத் தம்மை அர்ப்பணித்தார். அவர் தமது பிதாவிடமிருந்து ஒரு கட்டளையைப் பெற்றிருந்தார், மற்றும் அதற்குக் கீழ்ப்படியத் தீர்மானமாயிருந்தார்.

## முடிவுரை

இந்த வியாழக்கிழமை இரவில் இந்த அப்போஸ்தலர்களுக்கு இயேசு கூறியவற்றில் பெரும்பான்மையானவை அவர்கள் சிந்தையில் தெளிவற்றவையாக இருந்தன; ஆனால் அவர் முன்னுரைத்த நிகழ்வுகள் நடந்தபின்பு, அவர்கள் இவற்றை நினைவுகூர்ந்து, புரிந்துகொண்டு, விசுவாசிப்பார்கள். இயேசு விவரித்த ஒவ்வொன்றும் நிறைவேற வேண்டியதாக இருந்தது.

எதிர்காலத்திற்குள் கண்ணோக்குதல் என்பது எப்போதுமே திகைப்புக்குரிய விஷயமாகவே இருந்துள்ளது; ஆனால் புயல்மேகங்கள் சுற்றிச் சூழ்ந்துள்ள எதிர்காலத்திற்குள் உற்றுப்பார்த்தல் என்பது குறிப்பிடத்தக்க வகையில் கலக்கம் ஊட்டுவதாக உள்ளது. வர இருந்த இருளான நாட்களை இயேசுவின் அப்போஸ்தலர்கள், பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட்ட வழிகாட்டுதலுடனும், அவர் கொண்டுவரும் சமாதானத்துடனும், அவரது வார்த்தைகளினால் உண்டாக்கப்பட்ட விசுவாசத்துடனும் கண்ணோக்க வேண்டும் என்று இயேசு கூறினார். அவர் நமக்கும் இதையே செய்கிறார். அவர் தமது சீஷர்கள் யாவருக்கும், ஆவியானவரின் நடத்துவத்துவத்தையும், சமாதானத்தின் அமைதித்தன்மையையும், விசுவாசத்தின் தைரியத்தையும் அளித்திருந்தார். நாம் அவரது சமாதானத்தைக் கவனித்து, கற்றுக்கொண்டு, விசுவாசித்து ஏற்றுக்கொள்வோமாக.

---

*“நாம் வேதாகமத்தைப் பொறுத்த மட்டில் திறந்த மனமுள்ளவர்களாக, ‘(இரண்டாயிரம்) ஆண்டுகளுக்கு முன்பு இயேசு கிறிஸ்து வாழ்ந்தார்; ... அவர் வாழ்ந்தார், ... அவர் பேசினார், ... அவர் மரித்தார்’ என்று கூறுகிறோமா? ... அது போதிப்பவரின், இலக்கணவாதியின் மற்றும் வேதபாரகரின் நடையாக உள்ளது. ... ஒரு காலத்தில் கிறிஸ்து என்னவாக இருந்தார் என்பதை அதிகமாக அறிவதற்கல்ல, ஆனால் அவர் இன்று என்னவாக இருக்கிறார் என்பதை அதிகமாக அறிவதற்காக நாம், அந்தப் பக்கங்களை நாம் திறந்து வாசிக்க வேண்டும். அவைகள் தெய்வீக வரலாற்றின் துணுக்குகளாக - தெய்வீக நாட்குறிப்பில் இருந்து கிழிக்கப்பட்ட மாதிரிப் பக்கங்களாக உள்ளன. அவர் நேற்றும் இன்றும் நாளையும் மாறாதவறாக இருக்கிறார். அவருக்கு ஓராயிரம் ஆண்டுகள் ஒரு நாளாக உள்ளன; ஆகவே, மனிதர்கள் அவரது முகத்தைக் கண்டு அவரது குரலைக் கேட்ட வேளையில் தொடங்கி, அவர் நேற்றுக்காலைதான் நாட்களைக் கணக்கிடத் தொடங்கினார் என்பது போன்றுள்ளது. இவ்வாறு, சுவிசேஷ சத்தியங்களை வாசிப்பவர்களுக்கு, அவைகள் எந்த ஒரு காலைச் செய்தித்தாளைப் போலவும் புத்தம் புதியவையாக உள்ளன.”*[1]

---

குறிப்பு

[1]F.B. Meyer, *The Gospel of the King* (Grand Rapids, Mich.: Baker Book House, 1949), 31-32.